# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066907

1. District : *The Nilgiris* PS: *V & AC, Ooty* Year: *2019* FIR No.: *9/19* Date: *30.09.2019*
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: *PC (Amendment) Act, 2018* Sections பிரிவுகள்: *7(a). 12*
(ii) Act சட்டம்: *Cr.PC* Sections பிரிவுகள்: *102*
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் *30.09.19* Date to : நாள் வரை *Prior to 30.09.19 16.30 hrs.*
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் *20.00 hrs.* Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக *Typed Complaint.*

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: *About 2 kms East.*
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : *G. Baby Bala.* (b) Father's/ Husband's Name :
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : *Hindu* நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : *Asst Inspection Cell officer.* தொழில் (g) Address : முகவரி *District Collectorate Premises, O/o the Dist. Inspection Cell, Coimbatore*

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
*1) Tmt. Shanthini. Special Tahsildar (Civil Supplies) Taluk Office Campus, Ooty*
*2) Tr. Thiyagarajan, 3) Tr. Balaji (Private Individuals)*

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
*—*

GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/9/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature: Geethalakshmi] 30/9/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.த.க. மாவட்டம், நீலகிரி மாவட்டம்.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

ஊ.த.க.பிரிவு கு.எண்.9/2019/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை:-

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 30.09.2019-ம் தேதி இரவு சுமார் 20.00 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது கோயமுத்தூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட ஆய்வு குழு அலுவலக துணை ஆய்வுகுழு அலுவலர் திருமதி.G.பேபி பாலா அவர்கள் நிலையம் ஆஜராகி புகார் மனு ஒன்றினை கொடுத்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு: அனுப்புநர் திருமதி.G.பேபி பாலா, துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர் பொருள்: திடீர் தணிக்கை - நடவடிக்கை கோருதல் - சம்மந்தமாக. பார்வை: மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், கோவை மாவட்ட எண்.334/2019 நாள்: 30.09.2019. இன்று 30.09.2019-ம் தேதி எனது தலைமையில், உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம், உதகமண்டலம் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலக தனிவட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள் உதகமண்டலம் தாலுகாவில் உள்ள 113 நியாயவிலைக் கடைகளிலிருந்து இன்டெண்ட் பாஸ் செய்யவும், POS மெஷின்களின் மூலம் இறுதி இருப்பை சரிபார்க்கவும் வரும் விற்பனையாளர்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக கிடைக்கபெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் அவ்வலுவலகத்தை இன்று 16.30 மணிமுதல் 19.00 மணிவரை திடீர் தணிக்கை செய்தோம். இது சம்மந்தமாக தயாரிக்கப்பட்ட நடவடிக்கையை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் தணிக்கையின் போது இவ்வலுவலகத்தில் பணியில் இருந்த

B.Geethalakshmi
30/9/19

தற்காலிக பணியாளர்கள் திரு.தியாகராஜன் மற்றும் திரு.பாலாஜி ஆகியோர் உதகமண்டலம் தாலுகாவிலுள்ள நியாயவிலைகடை விற்பனையாளர்களிடம் இன்டெண்ட் பாஸ் செய்யவும், POS மெஷின்களின் மூலம் இறுதி இருப்பை சரிபார்க்க லஞ்சமாக பெற்ற பணம் ரூ.30,845/- கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட லஞ்சபணம் ரூ.30,845/- மற்றும் தற்காலிக ஊழியர்கள் திரு.தியாகராஜன் மற்றும் திரு.பாலாஜி ஆகியோர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்களை ஒப்படைக்கிறேன். எனவே, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் G.பேபி பாலா 30.09.2019. Submitted Received the above typed complaint on 30.09.2019 at 20.00 hrs and registered a case in The Nilgiris Detachment Cr.No.9/2019/AC/NI u/s 102 Cr.PC r/w Sec 7(a) and 12 of PC (Amendment) Act 2018. ஒப்பம் கீதாலட்சுமி 30/9/2019 Inspector of Police, Vigilance and Anti – Corruption, The Nilgiris. செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 30.09.2019 between 16.30 hrs and 19.00 hrs at Taluk Supply Office, Udhagamandalam, the Nilgiris District. முன்னிலை: 1) திருமதி.G.பேபி பாலா, துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம். 2) திருமதி.B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 30.09.2019-ஆம் தேதி கோயமுத்தூர் மாவட்டம், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருமதி.G.பேபி பாலா ஆகிய நான், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி என்பவருடன் பார்ட்டி சகிதம், உதகமண்டலம், தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலகத்தில் உதகமண்டலம் தாலுகாவில் உள்ள 113 நியாயவிலை கடைகளைச் (Ration Shops) சேர்ந்த விற்பனையாளர்களிடமிருந்து மாதாந்திர

B.Geethalakshmi
30/9/19

இன்டெண்ட் (Indent) பாஸ் செய்வதற்கு அங்குள்ள தனிவட்டாட்சியரும், மற்ற அலுவலர்களும் லஞ்சமாக பணம் கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. உதகமண்டலம் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலகமானது உதகமண்டலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பின்புறமாக உள்ளது. திடீர் தணிக்கைக்காக அலுவலகத்திற்குள் நுழைந்தபோது நுழைவாயிலின் வலதுபுறமாக இருந்த இருக்கையில் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த திரு.தியாகராஜன் என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் விசாரித்தபோது அவர் தான் இன்று (30.09.2019) தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) திருமதி.சாந்தினி அவர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமிற்கு சென்றுவருவதாகவும், அதனால் தன்னையும், திரு.பாலாஜி என்பவரையும் இன்று வரும் உதகமண்டலம் தாலுகாவிலுள்ள 113 நியாயவிலைகடைகளிலிருந்து வரும் விற்பனையாளர்களிடம் இறுதி இருப்பு சரிபார்த்து, இன்டெண்ட் பாஸ் செய்ய கூறியதன் பேரில் திரு.தியாகராஜன், உதகமண்டலம் தாலுகா நியாயவிலைகடைகளிலிருந்து வந்த ஒன்பது விற்பனையாளர்களிடம் மொத்தம் ரூ.4,400/- லஞ்சமாக பெற்று வைத்திருந்ததாக கூறி தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க இந்த பணம் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) திருமதி.சாந்தினி அவர்கள் வாங்கி வைக்கச் சொன்னதாக கூறினார். அந்த பணம் ரூ.4,400/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு தியாகராஜன் அமர்ந்திருந்த அறைக்கு அடுத்த அறையில் இளநிலை உதவியாளர் திரு.ரவி அவர்கள் அமர்ந்திருந்தார். அவரிடம் விசாரிக்க அவர் தானாக முன்வந்த தனது வலதுபுற பேண்ட் பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.4,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க பணம் ரூ.4,000/-ஐ இன்று

Geethalakshmi
30/9/19

மதியம் உதகமண்டலத்தில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி கிளையின் ஏடிஎம்மிலிருந்து எடுத்து வந்ததாகவும், பணம் எடுத்ததற்கான பாக்கி இருப்பு பட்டியலை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் பணம் ரூ.4,000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த திரு.பாலாஜி என்பவர் அலுவலகத்தின் வெளியில் இருந்து வந்தார். அவரிடம் விசாரிக்க தான் இந்த அலுவலகத்தில் கடந்த 2008 முதல் 2016 டிசம்பர் வரை ELCOT மூலம் பணியில் இருந்ததாகவும், பின்னர் 2017 முதல் தற்காலிக பணியாளராக தனி வட்டாட்சியர் (குடிமைபொருள்) அலுவலகத்தில் பணிபுரிவதாகவும் கூறினார். அவரிடம் விசாரிக்க அவர் இன்று உதகமண்டலம் தாலுகா நியாயவிலைகடைகளிலிருந்து வந்த விற்பனையாளர்களிடமிருந்து மொத்தம் ரூ.26,445/-ஐ லஞ்சமாக பெற்று தனது கார் Alto-800 TN43H-4185-ன் பின்புற சீட் கவரில் வைத்திருப்பதாக கூறி பணம் ரூ.26,445/-ஐ எடுத்து வந்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க இந்த பணம் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) திருமதி.சாந்தினி அவர்கள் வாங்கி வைக்கச் சொன்னதாக கூறினார். அந்த பணம் ரூ.26,445/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.தியாகராஜன் மற்றும் திரு.பாலாஜி ஆகியோர்களுக்கு மாதாந்திர ஊதியமாக தலா ஒவ்வொருவருக்கும் ரூ.5,000/-ஐ தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) திருமதி.சாந்தினி வழங்குவதாக கூறினார்கள். இருவரிடம் தனிதனியே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலகத்தை ஒட்டி வடக்கு பார்த்தவாறு இருந்த கணினி அறையில் OAS மூலம் POS (Point of Sale) கருவியை சரிபார்க்கும் தாலுகா என்ஜினியர் திரு.பிரவின் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க அவர் தன்னிடம் எந்த பணமும் இல்லை என்று கூறியனார். 1) 28 நியாயவிலை கடைகளுக்கான Offtake ஸ்டேட்மெண்ட் நாள்:30.09.2019, 2) இறுதி இருப்பு (Closing

Geethalakshmi
30/9/19

Balance - 174 பக்கங்கள்) பதிவேடு மற்றும் கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.30,845/- (ரூபாய் முப்பதாயிரத்து எட்நூற்று நாற்பத்தைந்து மட்டும்) ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலக அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையில் திருமதி.G.பேபி பாலா, துணை ஆய்வுகுழு அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கோயமுத்தூர் மாவட்டம் மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அலுவலக இளநிலை உதவியாளர் திரு.ரவி, தற்காலிக பணியாளர் திரு.தியாகராஜன் மற்றும் திரு.பாலாஜி ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமைகாவலர் திரு.நா.சக்தி என்பவர் லேப்டாபில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும், செயல்முறை ஆணையினையும் இன்று 30.09.2019-ம் தேதி இரவு 20.00 மணிக்கு பெற்று, உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2019/AC/NI சட்ட பிரிவு 102 Cr.PC r/w Sec 7(a) and 12 PC (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்து, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.30,845/- (ரூபாய் முப்பதாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து மட்டும்) ஆகியவற்றை கனம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்பித்தேன். முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

B.Geethalakshmi
30/9/19
காவல் ஆய்வாளர்
உ.த.க. பிரிவு, உதகை
நீலகிரி மாவட்டம்.